# அந்நத்வாவுக்கு
## ஓர் அன்பளிப்பு

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

# அந்நத்வாவுக்கு ஓர் அன்பளிப்பு

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

வெளியிடுவோர்:
நஸாரத் நஷ்ரோ இஷாஅத்
சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்
குர்தாஸ்பூர், பஞ்சாப் – 143 516

Tamil Translation of the Urdu Book

# TUHFATUN NADWAH

## அந்நத்வாவுக்கு ஓர் அன்பளிப்பு

Written by : Hazrat Mirza Ghulam Ahmad[as]
(Promissed Messiah & Mahdi)

Translated by : J.S. Saleem Ahmad

Composed by : A. Abdul Nizar


Year : 2022

Copies : 500

Published by : Nazarat Nashr-o- Isha'at
Qadian - 143 516
Gurdaspur
Punjab, India

Printed at : Fazl-e-Umar Printing Press
Gurdaspur, Qadian - 143 516
Punjab

Noorul Islam Toll Free No : 1800 103 2131
Tamil Toll Free No : 1800 425 40000



ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி

# நூலாசிரியரைப் பற்றி...

*வாக்களிக்கப்பட்ட மஸீஹூம், உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1835 -ஆம் ஆண்டு இந்தியாவிலுள்ள காதியான் எனும் சிற்றூரில் பிறந்தார்கள். தமது சிறு வயதிலிருந்தே இறை வணக்கத்திலும், பிரார்த்தனையிலும், திருக்குர்ஆன், பிற மத வேதங்களைக் கற்பதிலும் அன்னார் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள். அனைத்து திசைகளிலிருந்தும் தாக்குதலுக்கு உள்ளாகும் இஸ்லாத்தின் பரிதாப நிலையைக் கண்டு, அன்னார் மிகவும் வேதனை அடைந்தார்கள். இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காகவும், அதன் போதனைகளை தூய, பரிசுத்த வடிவில் வழங்குவதற்காகவும், அன்னார் தொண்ணூருக்கும் மேற்பட்ட புத்தகங்களையும், ஆயிரக்கணக்கான கடிதங்களையும் எழுதியதுடன், ஏராளமான மார்க்க விவாதங்களிலும் பங்கேற்றார்கள். நல்லொழுக்க, ஆன்மீக முழுமைத் தன்மையை அடையும் பொருட்டு, மனிதனுக்கு இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்தும் ஓர் உயிருள்ள மார்க்கமாக இஸ்லாம் திகழ்கிறது என அன்னார் வாதித்தார்கள்.*

*ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்களுக்கு, இளமைப் பருவத்திலிருந்தே இறைவன் புறமிருந்து கனவுகள், ஆன்மீகக் காட்சிகள், இறை வெளிப்பாடுகள், முன்னறிவிப்புகள் வரத் தொடங்கின. 1889 -ல், இறை கட்டளையின்படி அன்னார் பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். ஒரு தூய ஜமாஅத்திற்கான அடித்தளமிட்டார்கள். பின்னர் இறை வெளிப்பாடுகள்*

அதிகமாக வரத் தொடங்கின. மேலும், பல்வேறு மார்க்கங்களில், வெவ்வேறு பெயர்களில் முன்னறிவிக்கப்பட்ட இறுதிக் காலத்தின் சீர்திருத்தவாதி தாமே என்று இறை கட்டளைக்கு இணங்க வாதித்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முன்னறிவித்த அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி தாமே என்றும் அன்னார் வாதித்தார்கள். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தற்போது இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் நிறுவப்பட்டுள்ளது.

1908 –ஆம் ஆண்டில் அன்னாரது மறைவுக்குப் பின்னர், திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கிணங்க, அன்னாரது வருகையின் நோக்கத்தை முழுமைப்படுத்தும் பொருட்டு, கிலாஃபத் அமைப்பு (கலீஃபாவை நியமித்தல்) நிறுவப்பட்டது. ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹு்தஆலா பினஸ்ரிஹில் அஸீஹ்) அவர்கள், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஐந்தாவது கலீஃபாவாகவும், உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தற்போதைய தலைவர் ஆகவும் இருந்து வருகின்றார்கள்.

# பதிப்புரை

வாக்களிக்கப்பட்ட மஸீஹும், உறுதிமொழி வழங்கப்-பட்ட மஹ்தியுமான ***ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை)*** அவர்கள் எழுதிய '**துஹ்ஃபத்துன் நத்வா**' ***(அந்நத்வாவுக்கு ஓர் அன்பளிப்பு)*** என்ற நூலை மதிப்பிற்குரிய **J.S. *சலீம் அஹ்மது சாஹிப்*** அவர்கள் (சத்ர் புத்தக ரிவியூ கமிட்டி, தமிழ்நாடு) தமிழாக்கம் செய்து தந்துள்ளார்கள்.

இதை, சரிபார்ப்புக் குழு உறுப்பினர்களான மவ்லவி **O.M. *முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப்*** H.A. அவர்களும், முஅல்லிம் **M. *ஷாஜஹான் சாஹிப்*** அவர்களும், மதிப்பிற்குரிய **S.S.H. *முஹம்மது லெப்பை சாஹிப்*** அவர்களும் மூல நூலுடன் சரிபார்த்து திருத்தங்களை செய்துள்ளார்கள்.

அவர்கள் அனைவருக்கு அல்லாஹ் மேலான வெகுமதியை வழங்குவானாக! ஆமீன்.

வஸ்ஸலாம்

எளியவன்
**ஹாஃபிஸ் மக்தூம் ஷரீஃப்**
நாஸிர் நஷ்ரோ இஷாஅத்
காதியான்

# பொருளடக்கம்

அறிமுகம் ........................................................................ ix

அத்-தப்லீக் ........................................................................ 01

தில்லியைச் சேர்ந்த மீர் நாஸிர் நவாப் சாஹிப்
அவர்களின் கவிதை ........................................................................ 07

அந்நத்வாவுக்கு ஓர் அன்பளிப்பு ........................................................ 11

அனைத்து முஸ்லிம்களுக்கும் உண்மைக்காகப்
பசித்திருப்பவர்கள், தாகித்திருப்பவர்கள் அனைவருக்கும்
ஒரு பெரும் மகிழ்ச்சியான நற்செய்தி ............................................ 39

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# அறிமுகம்

*1902 -ஆம் ஆண்டில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவன் புறமிருந்து முன்னறிவிப்புகளைப் பெற்று வெளியிடவும், பெருவாரியாக விநியோகிக்கவும் தொடங்கி ஏறத்தாழ இருபது ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. தாம் பொய்யராக இருந்திருந்தால், நூற்றுக்கணக்கான முன்னறிவிப்பு -களை இறைவன் பெயரால் இவ்வாறு இட்டுக்கட்டிக் கூறி வெளியிட்ட பிறகும், திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள எச்சரிக்கையின்படி எல்லாம் வல்ல இறைவன் தமக்கு நீண்டதோர் ஆயுளை வழங்கியிருக்க மாட்டான் என்ற வாதத்தை முன்னிறுத்தி, தன்னுடைய வாதத்திற்குச் சான்றாக இத்தகைய முன்னறிவிப்புகளை அன்னார் தொடர்ந்து வெளியிட்டு வந்தார்கள். ஆனால், எல்லாம் வல்ல இறைவன் அன்னாருக்கு உதவி செய்யும் விதமாக எண்ணற்ற அடையாளங்களை அருள் கூர்ந்து வழங்கியதுடன், அவர்களது எதிரிகளுக்கு இழிவையும் ஏற்படுத்தினான்.*

*இந்தச் சூழ்நிலையில், ஹாஃபிஸ் முஹம்மது யூசுஃப் அவர்கள் பொது அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்கள். அதில், அன்னாரது வாதத்தில் எவ்வித தனித்துவமும் இல்லை என்றும், ஏராளமான பொய்யர்களும், ஏமாற்றுக்காரர்களும் கூட, கடந்த காலத்தில் தமது பொய் வாதத்திற்குப் பின்னரும் நீண்ட நாட்கள் உயிர் வாழ்ந்த பிறகே இயற்கை மரணம் அடைந்துள்ளனர் என்றும் கூறியிருந்தார்.*

இந்த அறிவிப்புக்குப் பதிலளிக்கும் பொருட்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'அந்நத்வாவுக்கு ஓர் அன்பளிப்பு' என்றொரு கருத்துச்செறிவுமிக்க சிறு நூல் மூலம் நத்வா ஆலிம்களுக்கு தமது அழைப்பை விடுத்தார்கள். இச்சிறிய புத்தகம் 1902 -ஆம் ஆண்டு அக்டோபர் 6 -ஆம் தேதி வெளியிடப்பட்டது.

இப்புத்தகத்தில், அன்னார் முஹம்மது யூசுஃப் அவர்களின் கருத்தை முற்றிலும் மறுத்தார்கள். மேலும், அது திருக்குர்ஆனின் தெளிவான போதனைக்கு முரண்படுவதை எடுத்துக் கூறியதுடன், முஹம்மது யூசுஃப் சாஹிபின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டால், உண்மையாளர்களிடமிருந்து பொய்வாதிகளை வேறுபடுத்திக் காட்டக்கூடிய வழிவகைகள் இல்லாது போகும் என்பதை உணர்த்தினார்கள்.

இப்புத்தகம் அத்-தப்லீக் என்று அரபியில் தலைப்பிடப்பட்ட முன்னுரையுடன் துவங்குகிறது. அதன் மொழியாக்கம் தரப்பட்டுள்ளது. அதில், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், அந்நத்வா ஆலிம்களை திருக்குர்ஆன் கூறும் தீர்ப்பின் பக்கம் அழைத்தவாறு, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற தனது வாதத்தை முன் வைக்கின்றார்கள். இயேசு கிறிஸ்துவின் மரணம் தொடர்பான புதிய சான்றுகளின் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடும் சிறிய முடிவுரையுடன் இப்புத்தகம் நிறைவு பெறுகின்றது.

***சவுத்ரி முஹம்மது அலி***
*வகீலுத் தஸ்னீஃப்*
*ரப்வா*
*ஜூன் 5, 2010*

# அத்-தப்லீக்

நத்வாவின் மக்களே! உங்களுக்கும் எங்களுக்கும் சமமாக இருக்கும் கூற்றின் பக்கம் வாருங்கள். திருக்குர்ஆனைத் தவிர வேறு எதனையும் தீர்ப்பு வழங்கக் கூடியதாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டாம். கருணைமிக்க இறைவனின் கூற்றுகளுடன் உடன்படுபவற்றைத் தவிர வேறு எதனையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டாம்.

கவனமற்றிருப்பவர்களே! நிச்சயமாக இஸ்லாம்தான் உண்மையான மார்க்கமாகும். திருக்குர்ஆன்தான் எல்லா நேர்வழிகளாலும் முழுமைப்படுத்தப்பட்டுள்ள வேதமாகும். இதன் போதனைகள் என்றும் நிலைத்து நிற்கக் கூடியவை. பாதுகாத்து வைப்பதற்கு முழுத் தகுதியுடையவை. இனிவரும் காலத்தின் இரகசியங்களையும், கடந்த காலத்தின் சம்பவங்களையும் அது உள்ளடக்கியுள்ளது. திருக்குர்ஆனைத் தவிர்த்து வேறு எதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்?

அறிந்து கொள்ளுங்கள்! அனைத்து நன்மைகளும் திருக்குர்ஆனிலேயே இருக்கின்றன. இவற்றுடன் மாறுபடுபவை தீமையான சொற்களே ஆகும். இறையச்சம் கொண்டவர்களே! அதில் கூறப்பட்ட விளக்கங்களுக்கும், வழிகாட்டல்களுக்கும் முரண்படுகின்ற அனைத்தும் ஒதுக்கிவிடப்பட வேண்டும். ஏனெனில், அப்படிப்பட்ட விஷயங்களை தீயவர்களைத் தவிர வேறு யாரும் ஏற்றுக் கொள்வதில்லை.

நிச்சயமாக நானே மஸீஹ் ஆவேன். நான் உண்மையுடன் நடந்து கொண்டவாறு, இறைவன்பால் உங்களது கவனத்தை ஈர்க்கிறேன். எனது இறைவனுக்காக நான் உங்களிடம் மன்றாடுகின்றேன். அவனது கோபத்தைக் குறித்து உங்களை எச்சரிக்கின்றேன். நீங்கள் கவனம் செலுத்த மாட்டீர்களா? நிச்சயமாக நான் என் இறைவனிடம் இருந்து தெளிவான அடையாளங்களுடன் உங்களிடம் வந்துள்ளேன். நீங்கள் அறியாதவற்றைக் குறித்து எனக்கு கற்றுத் தரப்பட்டுள்ளது. நீங்கள் கண்டிராதவற்றை நான் கண்டிருக்கின்றேன். உங்களது சந்தேகத்தை நீக்குவதற்காக, என்னிடம் வராமலேயே, நீங்கள் என்னைப் பொய்ப்படுத்துவீர்களா?

நிச்சயமாக ஈஸா மரணித்து விட்டார். அவருக்கு உயிர் கொடுப்பதில் உங்களால் வெற்றி பெறவே முடியாது. அறிவீனமான மக்களே! திருக்குர்ஆனைப் பொய்ப்படுத்தா -தீர்கள். நீங்கள் கற்பனை செய்து கொண்டிருப்பது போல், மறுமை நாளுக்கு முன்பாக இயேசு வருவதாக இருந்தால், கிறித்தவர்களின் வழிகேடு குறித்து தமக்குத் தெரியாது என்று அவர் ஏன் மறுக்க வேண்டும்? நீங்கள் படித்து அறிந்திருப்பது போன்று, இயேசு தனது அறியாமையை ஒப்புக் கொண்டவாறு, தமக்குப் பின்னால் கிறித்தவர்கள் வழக்கப்படுத்தி இருந்த புதுமையான விஷயங்கள் பற்றித் தனக்கு எதுவும் தெரியாது என்றே அவர் பதிலளிக்கிறார். இயேசு இவ்வுலகிற்கு மீண்டும் வந்திருந்து, இவர்கள்

செய்வதைப் பார்த்திருந்தால், அவர் இவ்வாறு பதில் அளித்திருக்க வேண்டும்: ‘என் இறைவா! நான் உனது கட்டளையால் உலகிற்கு மீண்டும் திரும்பினேன். எனது மக்களுடன் நாற்பது வருடங்கள் வாழ்ந்து வந்தேன். அவர்கள் என்னையும், எனது தாயாரையும் வணங்கக் கண்டேன். அவர்கள் தமது நிலைப்பாட்டில் விடாப்பிடியாக இருந்தனர். எனவே, நான் சிலுவைகளை உடைத்தேன். அவர்களது காலத்தின் தவறுகளை சீர்திருத்தினேன். அவர்களுள் பலரை நான் வாளால் வெட்டினேன். எனவே, அவர்கள் அடிபணிந்து அல்லாஹ்வின் மார்க்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.’

மறுமை நாளன்று ஈஸா ஏன் பொய்யுரைக்க வேண்டும்? என உங்களது ஈஸாவிடம் கேளுங்கள். அவர் தன்னிடம் இருந்த சாட்சியை மறைத்துக் கொண்டு, அறியாத மக்களைச் சார்ந்தவராக ஏன் இருக்க வேண்டும்?

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இறைவனிடம் இருந்து வந்துள்ளேன். நீங்கள் இறையச்சம் கொண்டவர்கள் என்றால், அல்லாஹ்வின் பெயரால் எடுத்துக் கொண்ட உடன்படிக்கையை கண்ணியப்படுத்துங்கள். எனக்கு பல அடையாளங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனது வழியைத் தவிர, மற்ற அனைத்து வழிகளையும் திருக்குர்ஆன் அடைத்து விட்டது. நீங்கள் வேறு எங்கு வெருண்டோடிச் செல்வீர்கள்?

நான் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் வந்துள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். சூரியனுக்கும், சந்திரனுக்கும் ரமலான் மாதத்தில் கிரகணம் ஏற்பட்டுள்ளது. இவை எனக்குச் சாதமாக கருணைமிக்க இறைவனிடம் இருந்து வந்துள்ள இரு அடையாளங்களேயாகும். மக்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பதற்காக, அவனே பிளேக் நோயைப் பரவச் செய்தான். நீங்கள் அல்லாஹ்வின் அடையாளங்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பதற்கு உங்களுக்கு என்ன நேரிட்டது? அல்லது உங்கள் கண்கள் காண்பவற்றைப் பற்றி நீங்கள் கண்டு கொள்ளாமல் இருக்கின்றீர்களா?

மக்களே! அல்லாஹ்வால் அருளப்பட்ட சான்றுகள் என்னிடம் இருக்கின்றன. நீங்கள் இனிமேலும் நம்ப மாட்டீர்களா? மக்களே! அல்லாஹ்விடமிருந்துள்ள சாட்சிகள் என்னிடம் இருக்கின்றன. நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டீர்களா? எனது இறைவனின் சாட்சிகளை எண்ணத் துவங்கினால் அவற்றை கணக்கிட முடியாது. அவசரப்படுபவர்களே! அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

உங்களுக்கு விருப்பமில்லாத போதனைகளுடன் தூதர்கள் உங்களிடம் வந்தபொழுதெல்லாம் நீங்கள் அவர்களில் சிலரைப் பொய்யராக்கினீர்கள். மற்றுஞ்சிலரை கொலை செய்ய முயற்சி செய்தீர்கள். என் இறைவன் எனக்கு உதவி செய்கிறான். நம்பிக்கை துரோகிகளே! என்னைக் கொலை செய்வதற்கான மார்க்கத் தீர்வைக் கொடுத்து

என்னைக் கொல்ல நினைக்கிறீர்களா? அதை அதிகாரிகள் வரை கொண்டு செல்கிறீர்களா? பிறகு நீங்கள் வெட்கப்படும் நிலைக்கு உள்ளாகவில்லையா? நானும் என்னுடைய தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என்று அல்லாஹ் நிர்ணயித்துள்ளான். போரைத் தூண்டுபவர்களே! அறிந்து கொள்ளுங்கள்! நீங்கள் அல்லாஹ்வை இயலாமைக்குள்ளாக்க முடியாது.

நான் உண்மையாளனாக இருக்கிறேன் என என் அல்லாஹ்வின் மீது நான் ஆணையிட்டுக் கூறிக் கொள்கிறேன். நான் இட்டுக்கட்டி கூறுபவர்களைச் சார்ந்தவன் அல்லன். நான் உங்களுக்கு முழுமையான ஆதாரங்களைக் காட்டிய பின்னரும், நீங்கள் என்னை நிராகரிக்கின்றீர்களா? உங்கள் அல்லாஹ்விடம் நீங்கள் திரும்ப மாட்டீர்களா? அல்லது உங்களது மஸீஹிடம் நிலையான ஆன்மீக வாழ்வைக் கண்டு கொள்ள மாட்டீர்களா?

நீங்கள் அந்நூர் (24 -ஆவது), தஹ்ரீம் (66 -ஆவது), ஃபாத்திஹா (1 -ஆவது) ஆகிய அத்தியாயங்களைப் படிக்க -வில்லையா? அல்லது அவற்றை ஓதுவதை நீங்கள் வெறுக்கின்றீர்களா? அல்லது அவை உங்களைக் குறித்து அல்ல என நினைக்கின்றீர்களா?

நத்வாவின் மக்களே! அல்லாஹ் உங்களுக்கு வழங்கி இருக்கும் அவகாசம் நிறைவடையும் முன், இப்புத்தகம் உங்களது கண்களைத் திறக்கக்கூடும் என்பதற்காகவே நான்

உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். உங்களால் வேறெந்த தற்காப்போ, போராட்டமோ என்னுடன் செய்ய முடியாது. நான் இந்தப் புத்தகத்திற்கு ‘நத்வாவுக்கு ஓர் அன்பளிப்பு’ எனப் பெயரிட்டுள்ளேன். நான் இதை உங்களிடம் அனுப்பி உங்களது பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

அல்லாஹ்வே! இறுமாப்பின்றி நடந்து கொள்பவர் -களுக்கு இந்தப் புத்தகத்தை அருளின் ஊற்றாக ஆக்குவாயாக என நான் துஆ செய்கிறேன்.

அல்லாஹ்வே! நீ என் மீது சுமத்திய பொறுப்பைச் சுமந்தவாறு, நான் தூதுச் செய்தியை எட்ட வைத்து விட்டேன் என்பதற்கு நீயே சாட்சியாளனாக இருக்கின்றாய். உனது தூதுச் செய்தியை அச்சமின்றி எடுத்துரைத்தவர்களின் எண்ணிக்கையில் என்னையும் சேர்த்துக் கொள்வாயாக! ஆமீன். ஸும்ம ஆமீன்!!

# தில்லியைச் சேர்ந்த மீர் நாஸிர் நவாப் சாஹிப் அவர்களின் கவிதை

நூஹ் நபியின் கப்பல் மார்க்கத்திற்கோர் அழைப்பாகும்.
அளவிலா அருளும் அழகும் பெற்றுத் திகழும்
ஓர் அற்புத நூலாகும்.

நம்பிக்கை புத்துயிர் பெறும். ஒருமுறையேனும்
அதைப் படிப்பதனால்
பளிச்செனவே பிரகாசிக்கும்
நிச்சய உறுதியின் ஒளியதனால்,

வாழ்வளிக்கும் நீரை விட தூய பொருள் அது
மாண்டோரையும் மீண்டுவரச் செய்யும் அமிழ்தமும் அது,

அதன் புகழைப் பேசிட வார்த்தைகள் ஏதுமில்லை
முழு மகிமையை சொல்லிச் செல்ல
எம்மால் இயலவுமில்லை.

அது தொலைந்தோர்க்கும் பாதையிழந்தோர்க்கும்
ஒரு கலங்கரை விளக்கம்
அவர்களின் திக்கிற்குத் திசை காட்டும் ஒரு வழிகாட்டி.

உதவிடுமே என்றும் உதவியற்றோர்க்கும்,
பலவீனருக்கும்
தந்திடுமே அடைக்கலம்
நம்பிக்கையிழந்தோர்க்கும்,

இணையிலா போதனை தம்முள் அடக்கியே
இறைவனின் தூதரின் ஓர் அடையாளம் ஆயிற்றே.

போதனையைச் சிந்தித்து, சிரத்தையாய் செயலாற்றும்
அனைவருக்கும்
மார்க்கத்தின் மாண்புக் கருவூலத்தை
மறைவின்றி அது வெளிப்படுத்தும்.

அறிவும், உண்மையும் தந்து அறியாமையிருள் அகற்றி
கூடா மூடநம்பிக்கையையும் அதிரடியாய் அது விரட்டும்.

சுவர்க்கத் தோட்டம் அது, அழியும் பூமியல்ல – அங்கு
இளமையழியா வாலிபரும்,
தூய கன்னியரும் உலா வருவர்.

பாலாறும் தேனாறும் பாய்ந்தோடும் அங்கு
அழகின் பிரமிப்பில் அசரும் வண்ணம் அமைந்த
கோட்டைகளைக் கடந்து.

எச்செலவும் எவர்க்குமில்லை இக்கப்பலில்
பயணிக்க – காரணம்
எள் முனையளவும்
கவலையில்லை கட்டாய கட்டணமளிக்க.

எமக்காக இக்கப்பலை கட்டிய இறையோன் அவனுக்காக
எமதனைத்தையும் பணயம் செய்ய
நாமிருக்கிறோம் ஆயத்த நிலையாக.

அருளாளனும் கருணைமிக்கவனுமாகிய
எங்கள் இறைவனே!

தொண்டுகள் பல செய்யும் வாய்ப்புதனைத்
தந்து நீ அருள்புரிவாய்.
தூக்கியெறிவோம் நாம் ஆன்மாவின் அவாக்களை
விலகட்டும் ஷய்த்தானின் தொடர்பு எம்மை விட்டு

என்றும் உம் கட்டளைக்கிணங்கியே
அல்லும் பகலும் நாம் நடப்போமே!
முழு உள்ளத்தால் உமக்கு
என்றும்நாம் கட்டுப்பட்டிருப்போமே!

எம்மீது நீயும் உம்மீது நாமும்
ஆத்மதிருப்திதனை அடைந்திருக்க வேண்டும்
உடலைவிட்டும் எம் உயிர் பிரியும் பொழுதினிலே!

இந்த எளியவன் நாஸிர் உம் அடியான் ஆவேன்.
வேண்டி நிற்கிறேன் நான், அடைக்கலம் உம்மிடம் நாடியே!

இறைவா! எமது விருப்பம் நிறைவேற
கருணை காட்டிடுவாய்
உமைச் சேரும் பாதைதனை எமக்கு
எளிதாக்கி வைத்திடுவாய்.

இறைவா! இரக்க சிந்தையோடு நடந்து கொள்வாயாக
இறையச்சமுடைய மக்களுடன் என்னைக்
கணக்கிட்டுக் கொள்வாயாக!

மறைவானவற்றின் அதிபதியே!
எமது தவறுகளைத் திரையிடுக!
மிகச் சிறந்ததை மட்டுமே நாம் உம்மிடம்
எதிர்நோக்குகின்ற படியாலே!

துக்கம் துயரங்களை எம்மிடமிருந்து போக்கிடுக!
முஹம்மது (ஸல்), அஹ்மது (அலை) ஆகியோருக்காக...

எமது இமாமிற்காக அர்ப்பணித்த ஓர் அடியான் நான்...
பிறர் அறியவும், அறியாத நிலையிலும்
எமக்கு நீ உதவிடுக!

# அந்நத்வாவுக்கு ஓர் அன்பளிப்பு

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ [1]

இறையுதவி எனது ஒவ்வோர் உயிர்மூச்சுடனும் வருகிறது. அகப்பார்வை கொண்டவர்கள் எங்கே? - இதைக் காண்பதற்கு.

இன்று 1902 -ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் ஓய்வூதியதாரர் ஹாஃபிஸ் முஹம்மது யூசுஃப் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்து வெளியிட்ட ஒரு பொது அறிவிப்பு கிடைக்கப் பெற்றேன். அவரைப் பொருத்தவரையில், இறைவனால் நபிமார்களாக அல்லது தூதர்களாக அனுப்பப்பட்டதாக பொய் வாதம் செய்து மற்றவர்களை வழிகெடுக்க நினைத்த சில மனிதர்களும் (ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நியமிக்கப்பட்டு நிலைத்திருந்த (முழுமையான காலமாகிய) 23 ஆண்டு காலம் இன்னும் கூறுவதென்றால், அதற்கும் அதிகமான ஆண்டுகள் உயிர் வாழ்ந்துள்ளனர் என்ற இந்தக் கருத்தை அவர் நீண்ட நாட்களாகக் கூறி வருகிறார். (ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது பொறுப்புகள் நிறைவேற 23 ஆண்டுகள்

1. அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்கிறேன். நாம் அவனைப் புகழ்கின்றோம். மேலும் அவனது கண்ணியமிக்க தூதர் மீது அருளைப் பொழியுமாறு துஆ செய்கின்றோம் - வெளியீட்டாளர்.

ஆயின.) மேலும், தனது நெருங்கிய நண்பர் அபூ இஸ்ஹாக் முஹம்மது தீன் என்பவர் வெளியிட்டுள்ள 'கத்வுல் வத்தீன்' என்றொரு புத்தகத்தில், இதுபோன்ற பொய்வாதிகளின் பெயர்களை வரலாற்று ஆதாரங்களுடன் அவர் பட்டியல் இட்டிருப்பதாகவும் ஹாஃபிஸ் சாஹிப் அறிவித்துள்ளார். அவர் لَوْ تَقَوَّلَ[2] மற்றும் وَاِنْ يَّكُ كَاذِبًا فَعَلَيْهِ كَذِبُهٗ[3] ஆகிய குர்ஆன் வசனங்களின் மீது ஈமான் இல்லை; ஈமான் கொள்ள விரும்பவுமில்லை. மாறாக, கத்வுல் வத்தீன் என்ற புத்தகம் இவ்வசனங்களை மறுத்து விட்டது. ஹாஃபிஸ் சாஹிப், முஹம்மது தீன் சாஹிப் ஆகிய இருவரின் கருத்துப்படி, கீழ்க்கண்ட வசனங்களும் கைவிடப்பட்டவையாகும்; செயல்படத் தகுந்தவை அல்ல.

وَقَدْ خَابَ مَنِ افْتَرٰى[4] اِنَّ الَّذِيْنَ يَفْتَرُوْنَ عَلَى اللّٰهِ الْكَذِبَ لَا يُفْلِحُوْنَ[5]

الَّذِيْنَ ظَلَمُوْا قَوْلًا غَيْرَ الَّذِىْ قِيْلَ لَهُمْ فَاَنْزَلْنَا عَلَى الَّذِيْنَ ظَلَمُوْا رِجْزًا مِّنَ السَّمَآءِ[6]

---

2. அவர் எந்தச் சொல்லையேனும் பொய்யான வெளிப்பாடாக எம்மீது சுமத்தி இருந்தால், நிச்சயமாக நாம் அவரை எம் வலக்கையால் பிடித்திருப்போம். (திருக்குர்ஆன் 69:45-46) - வெளியீட்டாளர்.

3. அவர் பொய்யராக இருந்தால், அவரது பொய்யினால் விளையும் தீங்கு அவரையே சேரும். (திருக்குர்ஆன் 40:29) - வெளியீட்டாளர்.

4. பொய்யைப் புனைந்து கூறுபவன், நிச்சயமாகத் தோல்வியடைவான். (திருக்குர்ஆன் 20:62) - வெளியீட்டாளர்.

5. அல்லாஹ்வின் எதிரில் பொய்யைப் புனைந்து கூறுபவர்கள் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை. (திருக்குர்ஆன் 16:117) - வெளியீட்டாளர்.

6. அநீதியாளர்கள் அவர்களிடம் கூறப்பட்டதற்கு முரணாக வேறொரு விஷயத்தை மாற்றி (கூறத் தொடங்கி) விட்டனர். அநீதி இழைத்தோர் மீது அவர்கள் கட்டுப்படாததனால் நாம் ஒரு தண்டனையை வானத்தில் இருந்து இறக்கி வைத்தோம். (திருக்குர்ஆன் 2:60) - வெளியீட்டாளர்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இறைவனின் பெயரால் பொய் கூறி இருந்தால் அவன் அவரைப் பிடித்து அவரது நாடி நரம்பைத் துண்டித்து விடுவதாக இறைவன் கூறும் வசனம் உட்பட இவ்வனைத்து வசனங்களும் கத்வுல் வத்தீன் என்ற புத்தகத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

மேற்கூறப்பட்ட எல்லா வசனங்களிலும், இட்டுக் கட்டிக் கூறுபவர்களைப் பற்றிய எல்லா எச்சரிக்கைகளும் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவையாகும். இந்த நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) இட்டுக் கட்டிக் கூறுபவர்களாக (நவூதுபில்லாஹ் - நாம் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறோம்) இருந்தாலும் ஹாஃபிஸ் சாஹிபின் கூற்றின்படி, அழிக்கப்பட்டிருக்க மாட்டார்கள்.

இவ்வாறு அனைத்து விதமான ஏமாற்றுகளுக்கும் ஒரு வெற்றிடத்தை உருவாக்கி, பொய்யர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கை எடுப்பதற்கும் இறையாட்சியில் இடமே இல்லை என இவர் கூறுகிறார்.[7] இதன் அடிப்படையில்,

---

7. ஹாஃபிஸ் சாஹிப் அவர்களது கண்ணோட்டத்தின்படி, பொய்வாதிகளுக்கு அவர்களின் எதிரிகளின் மூலம் உச்சகட்ட எதிர்ப்பு இருந்தபோதிலும், அவர்கள் தமது மார்க்கத்தை முழுமையாக நிலைநாட்டும் வரை அவர்கள் உயிர் வாழ்ந்து வருவதற்கு இறைவன் அவர்களுக்கு உதவி செய்துள்ளான் என்பதாகும். இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்படுமேயானால், தூதர்களின் வாதங்களின் உண்மைப்படுத்தும் நடுநிலைமையான, மிகவும் அவசியமான வழிமுறைகள் ஏதும் இருக்க முடியாது. உண்மைக்கும் பொய்க்கும் இடையேயான வேறுபாடு எப்போதும் நிச்சயமின்மையின் மறைவில் தெளிவற்றதாகவே இருக்கும். எனவே, எதிரிகளின் பலவகையான தீய

நபிமார்களில் எவரேனும் இறைவனைக் குறித்து இட்டுக் கட்டிக் கூறியிருந்தாலும் இவ்வுலகில் அவர்களுக்கு எந்தத் தண்டனையும் இல்லை. இக்கருத்தானது, மனிதனுடைய அரசாங்க சட்டங்கள் இறைவனது சட்டங்களை விட மேலானவை எனக் கருதும் சிக்கலையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏனெனில், பொய்யான சான்றுகளைக் கொண்டு வருபவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து அவர்களை தண்டிக்கும் வழிவகைகள் குறைந்தபட்சம் மனிதச் சட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. மேலும், ஹாஃபிஸ் சாஹிபைப் பொருத்த வரையில் திருக்குர்ஆன் முழுமையாக அருளப்பட்டு முடிப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு 23 ஆண்டு கால வாழ்நாட்கள் அருளப்பட்டதென்பதும், அன்னாரது உயிர், எதிரிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றப்பட்டு, அன்னார் தனது பணியை நிறைவு செய்த பின்னர் இறை விருப்பத்திற்கிணங்க மரணித்தார்கள் என்பதும் அற்புதம் அல்ல. எனது வருகையின்

---

எண்ணத்திற்கும் சூழ்ச்சிகளுக்கும் இடையில் ஒரு தூதருக்கு நீண்ட ஆயுளை வழங்கி, அவரது மார்க்கத்தின் விதையை இவ்வுலகில் வேரூன்ற உதவி புரிவது என்பது ஓர் அற்புதமே என்பது இதிலிருந்து பளிச்செனத் தெளிவுபடுகிறது. இது உண்மையான, முழுமையான இறை தூதர்களுக்கே வழங்கப்படுகிறது. இந்த முஃஜிஸாவில் (அற்புதத்தில்) பொய்யான தூதர்களும் அடங்குவர் என்றால், அந்நிலையில் முஃஜிஸா (அற்புதம்) என்பதும் நம்பத் தகுந்ததாக இருக்காது. மேலும் உண்மை நபியின் உண்மைக்கு எந்த உறுதியான அடையாளமும் எஞ்சியிருக்காது. அந்தோ! ஹாஃபிஸ் சாஹிப் அவர்களே! நீங்கள் இஸ்லாத்தையே தகர்த்து விட்டீர்கள்!! ஹாஃபிஸ் எனறால் இப்படியல்லவா இருக்க வேண்டும்?! - நூலாசிரியர்.

நோக்கத்தை நிறைவு செய்வதற்காக எனக்கும் ஏறக்குறைய எண்பது ஆண்டுகள் அருளப்படும் என்று முன்னறிவிக்கப் -பட்டிருக்கிறது. இந்த விஷயங்கள் ஹாஃபிஸ் சாஹிபின் பார்வையில் முஃஜிஸா (அற்புதம்) அல்ல. மேலும் அவரைப் பொருத்தவரையில் இதுபோன்ற முன்னறிவிப்புகள் நிறைவேறுவதால் எவரும் உண்மையாளர் என கருதப்பட மாட்டார். சுருக்கமாக, ஹாஃபிஸ் சாஹிபின் கொள்கைப்படி, நானோ, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ இந்த இறை பாதுகாப்பை எங்களது உண்மைக்கு சான்றாக குறிப்பிட முடியாது. மாறாக, பொய்யர்களும் இந்த சட்டத்தின் வரையறைக்குள் வருவதற்குச் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. ஆனால், இவரது இக்கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டால், பொய்யர்கள் பிடிக்கப்படுவார்கள்; அவமானத்திற்குள்ளாவார்கள்; அழிவுக்குள்ளாவார்கள்; தோல்வியைச் சந்திப்பார்கள் என்பன போன்ற திருக்குர்ஆனின் போதனைகள் முழுவதும் பொய்யானவை எனக் கருத நேரிடும்.

முந்தைய வேதங்களிலும் காணப்படுவது போன்று, இறைப் பணியை தெரிந்து கொண்டே அழிக்க முற்படும் ஒருவர், தானே அழிவுக்குள்ளாவார் என்ற கருத்தையே மனித அறிவும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால், ஹாஃபிஸ் சாஹிப் அவர்களின் கருத்துப்படி, தங்களைத் தூதர்கள் என்றும், இறைவனது வஹியைப் பெறக்கூடியவர்கள் என்றும் பொய்யாக வாதித்துக் கொண்டு, அதே வாதத்தில்

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பலர் வாழ்ந்து வந்துள்ளனர். இத்தகைய நபித்துவ வாதத்தில் அவர்கள் பிடிவாதமாக இருந்தனர். அவர்கள் தமது பொய்யான இறையறிவிப்புகளை எடுத்து வைப்பதை இறுதி மூச்சு வரை விடவில்லை. எதுவரையென்றால், இந்த குஃப்ரின் (இறை மறுப்பின்) நிலையிலேயே மரணித்து விட்டனர். இறைவன் அவர்களது ஆயுள் காலத்திலும், அவர்களது பணியிலும் அருளை வழங்கினான்; அவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்கவும் இல்லை; மேலும், மீண்டும் இஸ்லாத்திற்கு திரும்பி விட்டோம் என்பதை மக்களிடம் தெரிவிக்கும் வகையில் அவர்கள் தவ்பா செய்ததாகவோ, மக்கள் மத்தியில் தங்களது தவ்பாவை வெளிப்படுத்திய -தாகவோ எந்தச் சான்றும் இல்லை.

இதற்கான போதிய சான்றுகள் கத்வுல் வத்தீன் என்ற புத்தகத்தில் நன்றாக எழுதப்பட்டுள்ளது என்று ஹாஃபிஸ் சாஹிப் கூறுகின்றார். மேலும் 500 ரூபாய் சன்மானத்தைப் பெறுவதற்கு அவருக்கு விருப்பமில்லை என்றும் அவர் எழுதுகிறார். அதற்குப் பகரமாக, அமிர்தசரஸில் 1902 -ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9 -ஆம் தேதி துவங்க உள்ள இந்தியாவின் புகழ்பெற்ற மார்க்க அறிஞர்கள் கலந்து கொள்ளும் நத்வத்துல் உலமா சபையின் ஆண்டு மாநாட்டில் நியமிக்கப்படவிருக்கும் நடுவர்கள் அதாவது நத்வத்துல் உலாமாவைச் சார்ந்தவர்கள், கத்வுல் வத்தீன் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள வரலாற்று உண்மைகளை அங்கீகரித்து

விட்டால், அத்தருணத்தில் நான் வருத்தம் தெரிவிப்பதாக வாக்குறுதி அளிக்க வேண்டும் என்று இவர் விரும்புகிறார். அதாவது, எந்த வயதில் நான் ஆரம்ப வஹியை முழுமையான உறுதிப்பாட்டுடனும், உறுதி நம்பிக்கை-யுடனும், இறைவனுடைய வஹியின்படி, எனது வாதம் இருக்கிறதோ, என்னைப் பற்றி எவ்வாறு இறைவனின் வஹியைக் கொண்ட ஆயிரக்கணக்கான சொற்களை நான் எழுதியிருக்கிறேனோ, அவற்றை உலகில் புகழ் பெறச் செய்திருக்கின்றேனோ அவ்வாறே (நபி என்று பொய்யாக வாதித்த) அவர்களும் புகழ் பெறச் செய்திருந்தனர்; மேலும் அவர்கள் இறைவன் மீது இட்டுக்கட்டிக் கூறியிருந்தனர். ஆயினும் அவர்கள் நாசமாகவில்லை. மாறாக, என்னைப் போன்று அவர்களுக்கும் ஜமாஅத் உருவாகி விட்டது என்பதை நத்வா ஏற்றுக் கொண்டு விட்டால், அந்நிலையில் நான் அந்த சபையில் தவ்பா செய்ய வேண்டும்.

நத்வத்துல் உலமாவுக்கு இறைவன் அகப்பார்வையைக் கொடுத்திருக்கிறான் என்றால், (அவர்களிடம்) இறையச்சமும், நீதியும் இருக்கிறதென்றால், முழுமையாக சிந்தித்து சீர்தூக்கிப் பார்ப்பதற்கு நேரமும் இருக்கிறதென்றால், அவர்கள் கண்டிப்பாக எனது கூற்றையும், ஹாஃபிஸ் சாஹிபின் கத்வுல் வத்தீன் என்ற நூலையும் பார்த்து உண்மையான ஃபத்வா (மார்க்கத் தீர்ப்பு) கொடுக்க முடியும். ஆனால் நான் நத்வாவிடம் அமிர்தசரஸிற்கு வர முடியாது. ஏனெனில், எனக்கு அவர்கள் மீது நல்லெண்ணம் இல்லை. உண்மையில்,

அவர்களில் எவரையும் நான் இறையச்சம் உடையவர்களாகக் கருதவில்லை; (வருங்காலத்தில் இறைவன் எவரையாவது இறையச்சம் கொண்டவராக ஆக்கினால் அது அவனுடைய கருணையின் காரணம் ஆகும்). திருக்குர்ஆனைப் புரிதல் என்பது, لَّا يَمَسُّهُ إِلَّا الْمُطَهَّرُونَ [8] என்ற தத்துவத்தின் அடிப்படையில் இருப்பதால் திருக்குர்ஆனில் புதைந்துள்ள உண்மையான ஞானத்தை இவர்கள் பெற்றிருப்பதாக நான் நம்பவும் இல்லை. என் மனதில் இந்நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு இவர்களது நடுவர் அமைப்பை எவ்வாறு நான் ஏற்றுக் கொள்ள முடியும்?

இதற்குப் பதிலாக, அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மவ்லவிகள் உண்மையைத் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் காதியானுக்கு வருவார்களாயின், எனது தூதுச் செய்தியை நான் அவர்களுக்கு நேரில் தெரிவிப்பேன். இதற்கு சம்மதம் இல்லையெனில், இறைவனின் பணி தொடர்ந்து நடைபெறும். இதை எவராலும் தடுத்து நிறுத்த இயலாது. நிச்சயமாக ஒருவரது எதிரிகளிடமிருந்து மார்க்கத் தீர்ப்பைத் தேடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது?

இருந்தபோதிலும், ஹாஃபிஸ் சாஹிபின் இந்த பிரசுரத்தை, நாம் எமது தூதுச் செய்தியை அந்நத்வா மக்களுக்கு தெரிவிப்பதற்குக் கிடைத்த ஒரு வாய்ப்பாகக் கருதிக் கொள்கிறோம். எனவே, அத்தகைய பொய்வாதிகள்

---

8. தூய்மையாக்கப்படுபவர்களைத் தவிர வேறெவரும் அதனைத் தொட மாட்டார்கள். (திருக்குர்ஆன் 56:80) - வெளியீட்டாளர்.

தொடர்ந்து தீவிரமாகவும், அவர்களுடைய வாதத்தில் பிடிவாதமாகவும் இருந்ததுடன், அப்பொய்யர்கள் தவ்பா செய்யவே இல்லை என்றும் தகுந்த சான்றுகளுடன் நிரூபிக்காதவரை அப்புத்தகத்தின் தகவல்களை ‘கத்வுல் வத்தீன்’ என்று ஏற்றுக் கொள்ளத்தக்கதாகக் கருத முடியாது என்பதை ஹாஃபிஸ் சாஹிப் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், அந்த மக்கள் அந்த இட்டுக் கட்டிலேயே, நுபுவ்வத்தின் பொய்யான வாதத்திலேயே மரணித்தனர் என்றும், அவர்களின் ஜனாஸாவை அக்காலத்தின் எந்த மவ்லவியும் தொழ வைக்கவில்லை என்றும், அவர்கள் முஸ்லிம்களின் கபருஸ்தானில் அடக்கம் செய்யப்படவில்லை என்றும் அவர்களுடைய காலத்திலுள்ள எவருடைய குறிப்புகளிலிருந்து நிரூபணமாகாத வரை இந்தப் பிடிவாதம் எவ்வாறு நிரூபணமாக முடியும்? மேலும், இறைவனின் வார்த்தைகளாக அவர்கள் குறிப்பிட்டுக் கொண்டிருந்த அவர்களின் வாழ்நாள் முழுவதுமான பொய்யான வெளிப்பாடுகள் இப்போது எங்கே இருக்கின்றன? அவர்களின் இறையறிவிப்புகளைக் கொண்ட அந்த நூல் யார் யாரிடம் இருக்கின்றது? அவர்கள் எப்போதாவது தீர்க்கமான, உறுதியான வஹி பற்றி வாதம் செய்துள்ளார்களா? என்று அந்த நூலில் பார்க்க வேண்டும். அப்போதுதான் அவர்கள் தம்மை நபிமார்கள் என்று உண்மைப் பொருளில் தங்களைத் தெளிவுபடுத்தினார்களா? அல்லது நபிமார்களின் பிரதிபலிப்பாக தம்மைக் கருதினார்களா? என்பது நிரூபணமாகாத வரை இந்தக் கதைகளும் ஒருபோதும்

நிரூபணமாக முடியாது. அதாவது, தமக்கு கிடைத்த இறையறிவிப்புகள் குறித்து அவர்கள் விளங்கிக் கொண்ட விதம், முந்தைய நபிமார்கள் இறையறிவிப்புகளைப் பெற்றது போன்றே தாமும் இறைவன் புறமிருந்து நேரடியாக இறையறிவிப்பைப் பெற்றதாக அவர்கள் வாதித்தார்களா? என்ற ஒரு புரிதலுக்கு நாம் வர முடியும். அப்படியென்றால், تَقَوَّلَ[9] என்ற வசனம் இவர்களுக்கும் பொருந்தும். திட நம்பிக்கையும், நிச்சய உறுதியும் இந்த வசனத்தில் அடங்கியுள்ள கட்டளையில் மறைமுகமாக இருக்கின்றது என்ற உண்மையை ஹாஃபிஸ் சாஹிப் அறியாதவராக இருக்கின்றார்.

நான் இதற்கு முன்னரும் எண்ணற்ற முறை கூறி இருப்பதுபோல், தவ்ராத்தும், திருக்குர்ஆனும் இறைவனிட -மிருந்து வெளிப்பட்ட அதே வழிமுறையில்தான் நான் பேசுகின்ற வார்த்தைகளும் இறைவனிடமிருந்தே வெளி வருகின்றன. ஸில்லி, புரூஸி[10] என்ற நிலையில் நான் நபி ஆவேன். அனைத்து முஸ்லிம்களும் மார்க்க

---

9. திருக்குர்ஆன் 69:45-46 - வெளியீட்டாளர்.

10. ஸில்லி, புரூஸி ஆகிய சொற்கள், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்கள் தனது சுய முயற்சியில் நபித்துவத்தை அடைந்து விடவில்லை. மாறாக, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுடனான இருப்பில் அன்னார் முழுமையாக மூழ்கிவிட்டதன் காரணமாக அந்த நபித்துவ அந்தஸ்தைப் பெற்றார்கள். இதன் அடிப்படையில், அன்னார் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் ஆன்மீக ஒளியின் பிரதிபலிப்பாக இருந்தார்கள் என்பதை விளக்குகின்றன. - வெளியீட்டாளர்.

விஷயங்களில் எனக்குக் கட்டுப்பட்டு என்னை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக ஏற்றுக் கொள்வது அவர்களது கடமையாகும். எவர் எனது தூதுச் செய்தியைப் பெற்றதன் பின்னரும் என்னை நீதி நெறி தீர்ப்பவராகவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும் ஏற்றுக் கொள்ள-வில்லையோ, எனது இறையறிவிப்புகள் இறைவன் புறமிருந்து வந்தவை என்பதன் மீது நம்பிக்கை கொள்ள-வில்லையோ, அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும் வானத்தில் தமது செயல்களுக்காக பதிலளிக்க நேரிடும். ஏனென்றால், எந்த விஷயத்தை அதற்குரிய சரியான நேரத்தில் அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அவர்கள் அதை நிராகரித்து விட்டார்கள்.

நான் பொய்யராக இருந்திருந்தால், நான் அழிக்கப்-பட்டிருப்பேன் என்று மட்டும் நான் வாதிக்கவில்லை. மாறாக தாவூது (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) ஆகியோரைப் போன்றே நான் உண்மையாளன் என்றும் நான் உறுதியோடு கூறிக் கொள்கிறேன். என்னை உண்மைப்படுத்துவதற்காக இறைவன் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அடையாளங்களைக் காட்டியுள்ளான். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் எனக்கு சாதகமாக சான்று பகர்ந்துள்ளது போலவே திருக்குர்ஆனும் எனக்கு சான்று பகர்ந்துள்ளது. இதற்கு முன் தோன்றிய இறைத் தூதர்கள் எனது வருகையின் காலகட்டம் குறித்து தீர்க்கமாகக் கூறியுள்ளனர். அவ்வாறே திருக்குர்ஆனும்

கூறியுள்ளது. அது இக்காலகட்டமேயாகும். வானங்களும் பூமியும் எனது உண்மைக்குச் சாட்சி பகர்ந்துள்ளன. எனக்காக சாட்சி பகராமல் எந்தத் தூதரும் இவ்வுலகை விட்டுச் சென்றதில்லை. நான் இப்போது குறிப்பிடும் அடையாளங்களில் பத்தாயிரம் என்பது மிகக் குறைந்த மதிப்பீடேயாகும். உண்மையில், எனது உயிர் எவன் கையில் இருக்கிறதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் எனது உண்மைக்கான சான்றுகளை ஒரு பெரும் நூலில் நான் எழுதுவதாக இருந்தால், அது ஆயிரக்கணக்கான பகுதிகளைக் கொண்ட நூலாக இருந்தாலும் அதனுடைய பக்கங்கள் தீர்ந்து விடும். ஆனால், சான்றுகள் நிறைவு பெறாது.

இறைவன் தனது தூய திருமறையில் கூறுகின்றான்:

وَاِنۡ يَّكُ كَاذِبًا فَعَلَيۡهِ كَذِبُهٗ ۚ وَاِنۡ يَّكُ صَادِقًا يُّصِبۡكُمۡ
بَعۡضُ الَّذِىۡ يَعِدُكُمۡ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهۡدِىۡ مَنۡ هُوَ مُسۡرِفٌ كَذَّابٌ [11]

அதாவது, “அவர் பொய்யராக இருந்தால் அவரது பொய்யின் காரணமாக உங்களது கண்களின் முன்னால் அழிந்து போவார். அவருடைய பொய்யே அவரை அழித்து விடும். ஆனால் அவர் உண்மையாளராக இருந்தால் அவர் முன்னறிவித்தது போன்று உங்களில் சிலர் மரணிக்க நேரிடும். மேலும், அவரது கண்களின் முன்னாலேயே இவ்வுலகை விட்டுச் செல்வீர்கள்.” நீங்கள் என்னையும் எனது வாதத்தையும் இறை வேதத்தில் கூறப்பட்ட இந்த

11. திருக்குர்ஆன் 40:29 – வெளியீட்டாளர்.

அளவுகோலின் அடிப்படையில் சோதித்துப் பாருங்கள். என்னை அழிப்பதற்கான தங்களது முயற்சியில் மவ்லவிமார்கள் எந்த வாய்ப்பையும் விட்டு வைக்கவில்லை என்பது உண்மையில்லையா? எனக்குக் காஃபிர் என்ற மார்க்கத் தீர்ப்பை ஆயத்தம் செய்வதில் அலைந்து திரிந்து அவர்களின் கால்கள் தேய்ந்து விட்டன. எனக்கு எதிராக அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளில் எந்த அளவுக்கு வசைமாரி பொழிந்தனர் என்றால் அது ஷீஆ பிரிவினர் பயன்டுத்திய கண்ணியக் குறைவான வார்த்தைகளையும் மிஞ்சி விட்டது. அவர்கள் என்னை மீண்டும் மீண்டும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தியதோடு மட்டும் விட்டுவிடவில்லை. மாறாக, என் மீது பொய்யான கொலைக் குற்றச்சாட்டையும் சுமத்தினர். எனது கொள்கையால் ஈர்க்கப்பட்டவர்கள் எத்தகைய துன்பங்களுக்கு ஆளாயினர் என்றால், மக்காவில் இருந்த போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது சஹாபிகள் அனுபவித்த கடுந்துன்பங்களின் பரிதாப நிகழ்வுகளைத் தவிர என்னைச் சேர்ந்தவர்கள் அனுபவித்த ஏச்சுப் பேச்சுக்களுக்கும் கொடுமைகளுக்கும் வேறு உதாரணம் இல்லை. என்னைப் பின்பற்றிய வெளி நாட்டினருள் சிலர் அவர்களது சொந்த நாட்டிலேயே ஷஹீது ஆக்கப்பட்டனர்.

சுருக்கமாக, என்னை நசுக்கி விடுவதற்கும் என்னைக் காண வரும் மக்களைத் தடுத்து நிறுத்துவதற்கும் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை எவரால் மறுக்க

இயலும்? இந்த மவ்லவிகளில் பலர் பல வெட்கங்கெட்ட செயல்களைச் செய்தவர்கள் ஆவர். எனக்கு எதிராக அரசைத் தூண்டி விடுவதற்காக இவர்கள் அரசுக்கு என்னைப் பற்றிப் பொய்யான தகவல்களைக் கொடுத்தனர். ஆனால், இவ்வனைத்து செயல்களின் கடைசி விளைவு என்ன ஆயிற்று? என்பது பற்றி தெரியுமா? அது எனக்குக் கிடைத்த தொடர் வெற்றிகள் தாம், எதிரிகள் என்னைப் பொய்யர் என்றும், ஏமாற்றுக்காரர் என்றும் அறிவித்தபோதும், என்னை விரைவில் அழித்து விடுவதாக சூளுரைத்த காலங்களிலும் எனது இயக்கத்தில் பெரும் கூட்டத்தினர் இல்லை. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் வெகு சிலர் மட்டுமே அப்போது எனது இயக்கத்தில் இருந்தனர்.

உண்மை என்னவென்றால், நான் பராஹீனே அஹ்மதிய்யாவை வெளியிட்டபோது, நான் தனி நபராக இருந்தேன். என்னுடன் ஒரு நபரேனும் இருந்ததாக எவரேனும் கூற முடியுமா? அதற்குப் பிறகு இறைவன் எனக்கு ஐம்பதுக்கும் மேற்பட்ட முன்னறிவிப்புகளை அருளினான். அதில், இப்பொழுது நீர் தனியாக இருக்கின்றீர். ஆனால் ஒரு நேரம் வரும். அப்போது ஓர் உலகம் உம்முடன் இருக்கும் என்று இறைவன் என்னிடம் கூறினான். மேலும், அந்த காலமும் வரவிருக்கிறது. அப்போது நீர் எந்த அளவுக்கு மேன்மை அடைவீர் என்றால், அரசர்களும் உமது ஆடைகளில் இருந்து அருட்களைத் தேடும் அளவுக்கு உன் மீது அருள் செய்யப்படும் என்று இறைவன் முன்னறிவித்தான்.

இறைவன் தூயவன். இறைவன், தான் நாடியதைச் செய்கிறான். அவன் உமது இயக்கத்தையும் உமது ஜமாஅத்தையும் உலகம் முழுவதும் பரப்புவதாகவும், உமது சமுதாயத்தினர் மீது அருள் புரிவதாகவும், அவர்கள் இறைவனோடு செய்துள்ள உடன்படிக்கையில் உண்மை -யாளராக நீடிக்கும் வரை அவர்களது எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்து, அவர்களின் கண்ணியத்தை உலகில் நிலைநாட்ட இருப்பதாகவும் இறைவன் என்னிடம் கூறினான்.

பாருங்கள்! இந்த முன்னறிவிப்புகளை மொழியாக்கம் செய்து நான் பராஹீனே அஹ்மதிய்யாவில் முதன் முதலாக வெளியிட்ட போது நான் தன்னந்தனியாக இருந்தேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அப்போதுதான் இறைவன் எனக்கு رَبِّ لَا تَذَرۡنِیۡ فَرۡدًا وَّ اَنۡتَ خَیۡرُ الۡوٰرِثِیۡنَ [12] என்ற துஆவை கற்றுக் கொடுத்தான். அதாவது, இறைவா! என்னைத் தனியாக விட்டு விடாதே! வாரிசாக இருப்பவர்களில் நீயே மிகச் சிறந்தவன் ஆவாய். இந்த இல்ஹாமிய துஆவும் பராஹீனே அஹ்மதிய்யாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அக்காலகட்டத்தில், எனது பெயர் கூட அறியப்படாமல் இருந்ததற்கு பராஹீனே அஹ்மதிய்யா நூலும் ஒரு சாட்சியாக இருக்கின்றது. ஆனால், இன்று எனது எதிரிகளின் கடுமையான எதிர் நடவடிக்கைக்குப் பின்னரும், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களைக் கொண்ட எனது ஜமாஅத் பல்வேறு இடங்களில் இருக்கிறது. என்னை

12. திருக்குர்ஆன் 21:90 - வெளியீட்டாளர்.

எதிர்ப்பதற்கும் வீழ்த்துவதற்கும் மவ்லவிமார்களும் அவர்களின் சிறிய பெரிய தோழர்கள் அனைவரும் செய்த அனைத்து விதமான வஞ்சக வேலைகளும், அவர்கள் தீட்டிய சதித் திட்டங்களும் இதைப்போன்ற இன்ன பிற செயல்களும், அவர்களது திட்டங்களில் தோல்வியைத் தவிர வேறெதையும் சந்திக்கவில்லை. இது ஓர் அற்புதம் இல்லையா? இது அற்புதம் இல்லை என்றால் ஓர் அற்புதத்திற்கான இலக்கணம் என்னவென்று கூற ஜிப்பாவை அணிந்துள்ள இந்த நத்வா மவ்லவிமார்கள் தயைகூர்ந்து முன் வரட்டும்.

நான் முஃஜிஸாத்தை (அற்புதத்தை)க் கொண்டவன் இல்லையெனில், நான் ஒரு பொய்யன் ஆவேன். மர்யமின் மகனின் மரணம் திருக்குர்ஆன் சான்றுகள் மூலம் என்னால் நிரூபணமாகவில்லையெனில், நான் ஒரு பொய்யன் ஆவேன். மிஃராஜ்[13] குறித்த ஹதீது மர்யமின் மகன் ஏற்கனவே மரணித்த மற்ற ஆன்மாக்களுடன் இருப்பதைக் காட்டவில்லை எனில், நான் ஒரு பொய்யன் ஆவேன். இந்த உம்மத்தின் கலீஃபா இந்த உம்மத்தில் இருந்தே தோன்றுவார் என திருக்குர்ஆன் சூரா அந்நூரில் கூறவில்லை எனில், நான் ஒரு பொய்யன் ஆவேன். திருக்குர்ஆன் எனது பெயரை இப்னு மர்யம் என்று வைக்கா விட்டால் நான் பொய்யன் ஆவேன்.

13. புகாரி, கிதாப் மனாகிபில் அன்ஸார் பாபுல் மிஃராஜ்.
- வெளியீட்டாளர்.

அழிவிற்குரிய மக்களே! எனது எதிரிகளின் மிகக் கடுமையான எதிர்ப்புகள் இருந்தபோதிலும், சுமார் இருபத்தி இரண்டு வருடங்களுக்கு முன்னர் பராஹீனே அஹ்மதிய்யா நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள முன்னறிவிப்புகள் நிறைவேறியுள்ளன. இதைத் தவிர முஃஜிஸா (அற்புதம்) என்பது வேறு என்ன? அப்போது என்னோடு ஒரேயொரு நபரேனும் இருந்ததாக எவராலும் நிரூபிக்க இயலாது. ஆனால் இன்று, என்னை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக ஓரிடத்தில் ஒன்றுகூடுவதாக இருந்தால், அமிர்தசரஸ் நகரை விட ஒரு பெரிய நகரம் தேவைப்படும் என்று என்னால் நிச்சயமாக கூற இயலும்.

இந்த மவ்லவிகளின் தடைகள் இடையில் இல்லாதிருந்தால் பராஹீனே அஹ்மதிய்யாவிலுள்ள முன்னறிவிப்புக்கு இரட்டைப் பொலிவு ஏற்பட்டிருக்காது. ஆனால், இப்போது மவ்லவிகள் மற்றும் அவர்களைப் பின்பற்றுபவர்களின் எதிர்ப்புகள் இந்த அற்புதத்திற்கு இரட்டைப் பொலிவை ஏற்படுத்தி விட்டன.

وَاِنْ يَّكُ كَاذِبًا فَعَلَيْهِ كَذِبُهٗ [14] என்ற வசனத்தின் ஒளியில் நான் அப்பழுக்கற்றவன் என்று மட்டும் நிரூபிக்கவில்லை. மாறாக, சுமார் இருபத்திரெண்டு வருடங்களுக்கு முன்னர் பராஹீனே அஹ்மதிய்யா நூலில் வெளியிடப்பட்ட முன்னறிவிப்புகள் நிறைவேறியதன் மூலமும்

14. அவர் பொய்யராக இருந்தால் அவரது பொய்யினால் விளையும் தீங்கு அவரையே சாரும். (திருக்குர்ஆன் 40:29) -வெளியீட்டாளர்.

ஆயிரக்கணக்கான அருளுக்குரிய தகுதி வாய்ந்த நபர்கள் இவ்வியக்கத்தில் இணைந்துள்ளதன் மூலமும் எனது உண்மைத்துவம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இப்போது இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள இரண்டாவது பகுதியைப் பாருங்கள்! இந்த வார்த்தைகள் மிக அற்புதமான முறையில் நிறைவேறியுள்ளன. இறைவன் என்னை அழைத்து இவ்வாறு கூறினான்:

وَاِنْ يَّكُ صَادِقًا يُّصِبْكُمْ بَعْضُ الَّذِىْ يَعِدُكُمْ[15] இந்த தகுதியும் எவ்வளவு அற்புதமான முறையில் நிறைவேறியது! இறைவன் என்னை நோக்கிக் கூறினான்:

اِنِّىْ مُهِيْنٌ مَّنْ اَرَادَ اِهَانَتَكَ அதாவது, "எவரெல்லாம் உம்மை இழிவுபடுத்த நினைக்கின்றார்களோ, அவர்கள் தமது இழிவை காணும் முன்னர் மரணிக்க மாட்டார்கள்." இறைவனின் கட்டளையினால் என்னோடுள்ள எதிர்ப்பின் காரணமாக அவர்கள் இழிவுக்குள்ளாகவில்லையா? என்பதை இந்த மவ்லவிமார்களிடம் கேட்டுப் பாருங்கள். திருக்குர்ஆனின் يُّصِبْكُمْ بَعْضُ الَّذِىْ يَعِدُكُمْ[16] என்ற இந்த முன்னறிவிப்பு எனக்கு சாதகமாக நிறைவேறவில்லை என்று என்னை இழிவுபடுத்த நினைத்த இவர்களில் யாரால் கூற முடியும்?

பஃழு (சில) என்ற சொல்லைப் பயன்படுத்தியதன் மூலம், எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்பின்

---

15&16. ஆனால் அவர் உண்மையாளராயின், அவர் உங்களுக்கு முன்னறிவித்தவைகளுள் சில தண்டனைகள் உங்களுக்கும் நேரும். (திருக்குர்ஆன் 40:29) -வெளியீட்டாளர்.

உண்மைகளை நிரூபிக்க ஒரு சில உதாரணங்களே போதுமானவை என்பதை திருக்குர்ஆன் இங்கு எடுத்துக் காட்டியுள்ளது. குறிப்பிட்ட இந்த விஷயத்தைப் பொருத்த வரையில், உதாரணத்துக்கு குறைவேதும் இல்லை. உதாரணத்திற்கு, குலாம் தஸ்தகீர் என்பவர், தனது ஃபத்ஹே ரஹ்மானி என்ற புத்தகத்தின் 27 -ஆம் பக்கத்தில் என் மீது சாபமிட்டு, எங்கள் இருவரில் எவர் பொய்யரோ அவர் மீது இறைவனின் சாபம் உண்டாகட்டும் என்று எழுதிய சில நாட்களுக்குப் பிறகே மரணித்து விட்டார்.[17] எதிரிகளுக்கு இதில் உள்ள இழிவு குறைவானதா என்ன?

பீன் என்ற ஊரைச் சேர்ந்த முஹம்மது ஹஸன் என்பவர் தனது புத்தகத்தில் என்னைக் குறித்து [18] لَعْنَتُ اللّٰهِ عَلَى الْكٰذِبِيْنَ என எழுதினார். ஆனால், அந்தப் புத்தகத்தை எழுதி முடிக்கும் முன்னரே, அவர் கடும் தண்டனையால் மரணித்து விட்டார். பீர் மெஹர் அலி ஷாஹ் என்பவரும் எனக்கு எதிராக லஃனத்துல்லாஹி அலல் காஸிபீன் என்று கூறினார். இவ்வாறு செய்ததற்காக, முஹம்மது ஹஸன் மறைவிற்குப் பிறகு, அவரது முழு நூலையும் திருடி, தனது படைப்பென ஏமாற்றி வெளியிட்டதற்காக எழுத்துத் திருட்டின் குற்றத்திற்கு அவர்

17. மக்கமா நகரின் அறிவற்ற மவ்லவிகளிடமிருந்து எனக்கு எதிராக நான் காஃபிர் ஆவேன் என்ற மார்க்கத் தீர்ப்பை எழுத வைத்த அதே மவ்லவி முபாஹலாவிற்கு பலியானார். இது அற்புதம் இல்லையா? என்பதை நினைத்துப் பாருங்கள் - நூலாசிரியர்.

18. பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக.
-வெளியீட்டாளர்.

ஆளானார்.[19] அவர் பொய்யுரைத்து ஏமாற்றிய அந்தப் புத்தகத்திற்கு ‘ஸய்ஃஃபே சிஷ்தியாயீ’ என பெயரிட்டார்.

மேலும் ‘இஃஃஜாஸுல் மஸீஹ்’ என்ற எனது புத்தகத்தை குறித்து இறந்துபோன முஹம்மது ஹஸன் எழுதிய விமர்சனமும் படுதோல்வியைச் சந்தித்து காணாமல் போனது. அந்த விமர்சன வரிகளை இறுதித் திருத்தம் செய்வதற்கு முன்னரே அவர் மரணித்தார். ஆனால், அரபி மொழி பற்றி எந்த அறிவும் இல்லாத (மெஹர் அலி ஆகிய) இவர் (முஹம்மது ஹஸனின்) அந்த எல்லா விமர்சனங்களையும் உண்மையானவை எனக் கருதி விட்டார். நூலின் ஆவணத்தைத் திருடினார்; மேலும் திருட்டு பிடிபட்டது.

---

19. மெஹர் அலி என்பவர் இறந்து போன முஹம்மது ஹஸன் செய்த குற்றச்சாட்டுகளை நம்பி, அரபியிலுள்ள சில புகழ்பெற்ற உதாரணங்களும் அல்லது மகாமாத்தே ஹரீரீ (என்ற அரபியிலுள்ள புகழ்பெற்ற இலக்கிய நூல்) யிலுள்ள சொற்களும் எனது நூல்களில் காணப்படுகின்றன என்று அறிவற்ற முறையில் என் மீது குற்றம் சுமத்தியுள்ளார் என்பது உண்மைதான். ஆனால், அவற்றை எனது புத்தகத்தில் ஒரு மேற்கோளாக மட்டுமே காட்டியுள்ளேன். அவை அதிகபட்சமாக இரண்டு அல்லது மூன்று வரிகள்தான் இருக்கும். இந்த முட்டாள் மனிதன் கருத்துப்படி, இது எழுத்துத் திருட்டிற்கான சான்றாகும். எனவே, اِنِّیْ مُهِيْنٌ مَّنْ اَرَادَ اِهَانَتَكَ என்ற அந்த முன்னறிவிப்பு இந்நேரத்தில் தனது முகத்தைக் காட்ட வேண்டியது அவசியமாக இருந்தது. எனவே அவர் ஒரு முழு நூலையும் (காப்பியடித்து) திருடியவராக நிரூபணமானார்; பொய்யுரைத்தார்; (முஹம்மது ஹஸனின்) தவறான குற்றச்சாட்டுதலைப் பின்பற்றினார். அது தவறு என்று உணர முடியாது போய் விட்டார். இவ்வாறு அவர் கடுமையான மூன்று குற்றச்சாட்டுகளில் பிடிக்கப்பட்டார். இது ஓர் அற்புதம் இல்லையா? - நூலாசிரியர்.

பிறகு அரியணையில் வீற்றிருப்பவராக மாறி இந்த நூலை நான் இயற்றியிருக்கிறேன் என்று அப்பட்டமான பொய்யைக் கூறினார். இதுவும் ஒரு வகை மரணமா? இல்லையா? எனக் கூறுங்கள். பின்னர் எதைத் திருடினாரோ அதுவும் எப்படிப்பட்ட தவறுகள் என்றால் அவை அசுத்தமானவை ஆகும். இந்த தண்டனையை விட நரகத்தின் தண்டனை அதிகமா என்ன? [20]

ஒரு கற்பனைக்காக, நபி என்று வாதித்தவரின் ஏதாவது ஒரு இல்ஹாமிய நூல் கிடைத்து, அதை அவர், திருக்குர்ஆன் கூறுவதைப் போன்று லா ரய்ப ஃபீஹீ - இதில் எந்த சந்தேகமும் இல்லை என்ற பண்பைக் கொண்டதாக அந்த வஹியை (நான் வாதித்திருப்பதைப் போன்று) அவர் வாதிட்டுக் கூறி, பின்னர் அவர் தவ்பா செய்யாமல் மரணித்தார் என்றும், முஸ்லிம்களின் கபருஸ்தானில் அவர் அடக்கம் செய்யப்படவில்லை; எந்த தண்டனையினாலும் அவர்

---

20. நான் தற்போது நுஸூலுல் மஸீஹ் என்ற விரிவான ஒரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறேன். அதில் ஒரு பகுதியில், மெஹர் அலி சாஹிபின் எழுத்துத் திருட்டு பற்றியும், பொய்யான விமர்சனத்தை ஒப்புக் கொண்ட அவரது அறியாமை பற்றியும், மர்யமின் மகன் இன்னும் உயிரோடு இருக்கிறார் என்ற தவறான நம்பிக்கை பற்றியும், அறியாமை மற்றும் புரிதலின்மை ஆகியவற்றால் விளையும் இதுபோன்ற பிற விஷயங்கள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளன. புத்தகத்தின் பதினோரு பிரிவுகள் ஏற்கனவே வெளிவந்து விட்டன. விரைவில் அவர் கொண்டுள்ள வெற்றுக் கோட்டையின் கொள்கைகள் அவரைச் சுற்றிலும் தகர்ந்து விழும். அப்போது கிளம்பும் தூசியும், புழுதியும் அவரது கண்களைப் புண்ணாக்கி, அவருக்கு பரிதாப நிலையை ஏற்படுத்தும் - நூலாசிரியர்.

நாசமாகவில்லை என்ற அளவில் மட்டும், தான் நபி என்று வாதித்த எந்த பொய் வாதியும் எனக்கு நிகராக முடியாது.

ஏனெனில் எனக்கு ஆதரவாக முஃஜிஸாத்துகளும் (இறை அற்புதங்கள்) இருக்கின்றன. அத்துடன் நான் உறுதி கொள்கிறேன்; ஹாஃபிஸ் சாஹிப் முயற்சி செய்து, முயற்சி செய்து உலகத்தை விட்டுச் சென்று விட்டாலும் அல்லது இன்னோர் அபுல் இஸ்ஹாக் முஹம்மது தீன் என்பவர் மூலமாக இன்னோர் ஆயிரம் கத்வுல் வத்தீன் என்ற நூலை எழுதினாலும் - மேலும் அவர் கத்வுல் வத்தீன் (எனும் நாடி நரம்பைத் துண்டிக்கச்) செய்து தற்கொலை செய்து கொண்டாலும், நான் சுமார் 23 ஆண்டுகளாக எனது வஹியை இன்று வரை தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருப்பது போன்று அவரது தொடர்ச்சியான 23 ஆண்டு கால வஹியின் தொகுப்பை எடுத்து வைக்கும் நற்பாக்கியம் ஹாஃபிஸ் சாஹிபுக்கு கிடைக்காது. அதைப் பற்றி அவர், என்னைப் போன்று, இந்த வஹி தீர்க்கமாகவும், உறுதியாகவும் இறைவனின் வார்த்தையாகும் என்று ஆணையிட்டுக் கூறியிருக்க வேண்டும்.

நான் எனது முந்தைய புத்தகங்களிலும் மீண்டும் மீண்டும் என்னைப் பற்றி நான் கூறியிருப்பதைப் போன்று, நான் பொய்யன் என்றால், இறைவனின் சாபம் என்மீது விழட்டும் என்று ஆணையிட்டுக் கூறியிருக்க வேண்டும். அத்தகைய பொய்யர்களோடு என்னை ஒப்பீடு செய்து பார்ப்பது குறைந்த அளவிலான விஷயமாகும். நான் இதை

விட அதிகமாக சான்றைக் கொண்டுள்ளேன். அதாவது, ஆயிரக்கணக்கான மக்கள் சாட்சி பகரும் வகையில் நிகழ்த்தப்பட்ட ஆயிரக்கணக்கான அற்புதங்கள் எனது உண்மைக்கு மறுக்க முடியாத சான்றுகளாகத் திகழ்கின்றன. திருக்குர்ஆனும் எனது உண்மைக்குச் சாட்சியாகும். அவ்வாறிருக்கையில், இத்தகைய பொய்வாதிகளால் எடுத்து வைக்கப்பட்ட சான்றுகளைக் குறித்து ஹாஃபிஸ் சாஹிபிடம் நான் கேட்பதற்கு எனக்கு உரிமை இல்லையா? சூரிய, சந்திர கிரகணங்கள் தொடர்பான தாரே குத்னி[21] ஹதீது என்னைத் தவிர வேறு யாருக்குச் சாதகமானதாக நிறைவேறின? நம்பத்தகுந்த நபிமொழிகளில் காணப்பட்ட முன்னறிவிப்புக்கிணங்க, எவரின் உண்மைக்கு அடையாளமாக பிளேக் நோய்[22] பரவியது? யாருக்காக வால் நட்சத்திரம்[23] தோன்றியது? லேக்ராம் போன்ற பலரின் முடிவுகளின் அடையாளங்கள் யாருக்காக வெளிப்பட்டன?

நத்வத்துல் உலமா சபையினர் தாங்கள் தங்களுக்காக தேர்ந்தெடுத்துள்ள அருமையான பெயரின்படி வாழ்ந்து காட்டவும், உண்மையை அறியவும் விரும்பினால், கடந்த காலங்களில் நபித்துவ வாதம் செய்த பொய்யர்களுக்கு முன்னறிவிப்பு இறங்கிய கால அளவு, திருக்குர்ஆன்

---

21. தாரே குத்னி - கிதாப் ஈதய்ன், பாபு ஸிஃபதி ஸலாதில் குஸூஃபி வல் குஸூஃபி வஹய்அதிஹிமா - வெளியீட்டாளர்.

22. முஸ்லிம், கிதாபுல் ஃபிதனி வ அஷ்ராதிஸ் ஸாஅதி, பாப் ஃபில் ஆயாதில்லதி தகூனு கப்லஸ் ஸாஅதி - வெளியீட்டாளர்.

23. பிஹாருல் அன்வார், தொகுதி 52 பக்கம் 268 - வெளியீட்டாளர்.

முழுமையாக அருளப்பட்ட அதே கால அளவு போன்று, அதாவது 23 ஆண்டுகள் நீடித்ததா? என்பதை சத்தியம் செய்து கூறுமாறு, அவர்கள் ஹாஃபிஸ் சாஹிபிடம், அவர் விரும்பினாலும் விரும்பாவிடினும் குறைந்தபட்சம் கேட்கவாவது வேண்டும்.

அந்த பொய்வாதிகள் இறைவன் பெயரால் தங்களைத் தூதர்கள் என்று வாதித்தனர் என்றும், தங்களது வஹிகள் திருக்குர்ஆனின் வசனங்களைப்போன்று உறுதியானவை, தீர்க்கமானவை என்றும் இறைவன் பெயரால் வாதிட்டதாக, ஹாஃபிஸ் சாஹிபை நிரூபித்துக் காட்டுமாறு கூற வேண்டும். மேலும் அத்தகையோர் அக்காலத்து மவ்லவிகளால் காஃபிர் என மார்க்கத் தீர்ப்பு வழங்கப்பட்டார்களா? இல்லையா? என்பதற்கான சான்றுகளையும் வழங்க அவர் முன் வர வேண்டும். இல்லையென்றால், ஏன் அவ்வாறு செய்யவில்லை? மார்க்க விஷயங்களில் இந்த அளவு கவனக் குறைவாக இருக்கும் அளவுக்கு ஆலிம்கள் மிக நேர்மை அற்றவர்களாகவும், தீயவர்களாகவும் இருந்தனரா? இந்த பொய்வாதிகள் எங்கு அடக்கம் செய்யப்பட்டனர் என்பதற்கான சான்றுகளை அளிக்குமாறும் அவரிடம் கேட்க வேண்டும். அதாவது, அவர்கள் அடக்கப்பட்ட கபருஸ்தான் முஸ்லிம்களுடையதா? அல்லது மாற்று மதத்தவர்களுக்கு சொந்தமானதா? மேலும் முஸ்லிம்களின் ஆட்சியில்,[24]

---

24. இஸ்லாமிய ஆட்சியில் பொய்வாதிகளின் நிலையைப் பொருத்தவரை, அவர்கள் முஸ்லிம்களின் கபருஸ்தானில் அடக்கப்படவில்லை அல்லது அவரது ஜனாஸா தொழுகை முஸ்லிம்களால் தொழப்பட வில்லை என்று மட்டும் ஹாஃபிஸ் சாஹிப் நிரூபித்தால் போதுமானதன்று. மாறாக,

கொலையுண்டனரா? அல்லது சாந்தியும் அமைதியும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தனரா?

இத்தகைய ஆதாரங்களை ஹாஃபிஸ் சாஹிபிடம் கேட்ட பிறகு, எனது முஃஜிஸாத்து(அற்புதங்)கள் மற்றும் திருக்குர்ஆன், ஹதீஸ் சான்றுகளைப் பெறுவதற்காக நத்வாவைச் சேர்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஆலிம்கள் காதியான் வரட்டும். அவர்கள் எனது அற்புதங்களுக்கான சான்றை என்னிடம் கோரட்டும். எனது உண்மைக்குச் சான்றாக திருக்குர்ஆன் மற்றும் ஹதீதில் காணப்படும் ஆதாரங்களையும் கேட்கட்டும். அப்போது நான் நபிமார்களின் நடைமுறைக்கேற்ப முழுமையான சான்றை நான் கொடுக்கவில்லை என்றால், எனது எல்லா புத்தகங்களையும் தீயிலிட்டுக் கொளுத்துவதற்கு நான் சம்மதிக்கின்றேன். ஆனால், உண்மை என்னவெனில், இறைவனுக்கு நெருக்கமான மனிதர்கள் மட்டுமே உண்மையைத் தேடுவதில் அந்த அளவுக்கு ஆழமாகச் செல்ல இயலும். நத்வாவின் ஆலிம்களுக்கு இந்த அளவுக்கு தலைவலியை தாங்கிக் கொள்ள வேண்டிய தேவை என்ன வந்து விட்டது? மறுமையைப் பற்றி எவ்வித கவலையும் இல்லாத போது, அவர்கள் ஏன் இறைவனுக்கு அஞ்ச வேண்டும்?

---

(ஹாஃபிஸ் சாஹிபும், நத்வத்துல் உலமா சபையினர் ஆகிய இருவரும் மார்க்கத் துரோகத்திற்கு தண்டனை மரண தண்டனை என்றே நம்புகின்ற காரணத்தால்) இவர்கள் மார்க்கத்திற்கு துரோகம் செய்த காரணத்தால் கொல்லப்பட்டனர் என்பதை (அவர் நத்வத்துல் உலமாவினருக்கு நிரூபிக்க வேண்டும்). ஆனால், அவர் இதற்கான சான்றுகளைச் சமர்ப்பித்தால், எந்த விஷயத்திலிருந்து அவர் வெருண்டோடினாரோ அதையே ஏற்றுக் கொண்டு விடுவார்கள் - நூலாசிரியர்.

தாம் நிரந்தரமாக இந்த உலகில் வாழப்போவதில்லை என்பதை நத்வா உலமா சபையிலுள்ள ஒவ்வொருவரும் நினைவில் கொள்ள வேண்டும். மரணம் அவர்கள் அனைவரையும் அழைக்கிறது. எந்த அற்பத்தனமான விஷயங்களில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டு அதை மார்க்கம் எனக் கூறிக் கொள்கின்றனர் என்பதை இறைவன் வானிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறான். ஆனால், இது மார்க்கம் இல்லை; அவர்கள் ஒரு தோலின் மீது திருப்தி கொண்டுள்ளனர். கனியை அறியாதவர்களாக இருக்கின்றனர் என்பதை அவன் அறிகின்றான். இது இஸ்லாத்திற்கு செய்யும் தொண்டு அல்ல. மாறாக தீங்காகும்.

இறைவனால் அனுப்பப்பட்ட மஸீஹ் நிராகரிக்கப் பட்டுள்ளதன் மூலம், அவர்கள் இவ்வுலகில் ஒரு பெரும் பாவத்தைச் செய்துள்ளனர் என்பதை அவர்களுக்குக் கண்கள் இருந்தால் கண்டு கொள்வர். ஒவ்வொரு மனிதரும் தாம் மரணித்த பிறகு இதை அறிந்து கொள்வார். ஆனால், நீர் அமிர்தசரஸ் நகருக்குச் செல்லாவிடில் முழு உலகமும் உமது வாதத்தைப் பொய் எனக் கருத நேரிடும் என்ற கருத்தை என்னிடம் கூறி ஹாஃபிஸ் சாஹிப் என்னை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார். ஹாஃபிஸ் சாஹிப்! இவ்வுலகத்தின் செயல்பாடுகளை நீங்கள் ஆட்சி செய்கின்றீர்களா? அல்லது இறைவனா? நீங்கள் ஏற்கனவே என்னை பொய்யர் என்றே கருதுகின்றீர்கள். இதற்குப் பிறகு வேறு என்ன கருதுவீர்கள்? உங்களைப் பற்றியும் உங்களது உலகைப் பற்றியும் எனக்கென்ன கவலை? ஒவ்வோர் ஆன்மாவும் எனது இறைவனின் காலடியில் இருக்கின்றது. துர்பாக்கியசாலியான

ஹாஃபிஸ் சாஹிப் அவர்களே! கேட்பீராக! இறைவனின் ஆதரவு எந்த அளவுக்கு எனக்கு முன்னேற்றத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றது என்பதைக் குறித்து உங்களுக்கென்ன தெரியும்? என் மீது பொறாமை கொண்டவர்கள் கூட, தன் வாழ்நாளின் கடைசி நொடிப் பொழுது வரை போராடிய போதிலும் அவர்களால் எனது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்த முடியாது. ஏனெனில் (முன்னேற்றமாகிய) இது மனிதனுடைய கையினால் அல்ல; இறைவனுடைய கையினால் இறைவனுடைய வாக்குறுதிக்கேற்ப இருக்கிறது. இறைவன் பஞ்சாப் மாநிலத்தையும் இந்தியாவின் நகரங்களையும் எனது ஜமாஅத்தைச் சார்ந்த மக்களால் நிறைத்துள்ளான். சில குறுகிய ஆண்டுகளிலேயே, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் என்னிடம் பைஅத் செய்து இணைந்துள்ளனர். வானம் யாருக்கு உதவுகிறது என்பதை இன்னுமா நீங்கள் உணரவில்லை?

என்னுடைய மதிப்பீட்டின்படி, பிளேக் நோயின் அடையாளத்தினால் மட்டும் ஏறக்குறைய பத்தாயிரம் மக்கள் எனது ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். இன்னும் சில ஆண்டுகளில், முழு உலகமும் என்னைப் பின்பற்றுவோரால் நிரப்பப்படும் என்று நான் நம்புகிறேன். ஹாஃபிஸ் சாஹிப் அவர்களே! 'காதியானில் ஓர் ஒளி இறங்கியது. ஆனால், எனது குழந்தைகள் இழப்பிற்குரியோர் ஆகி விட்டனர்' என்று மவ்லவி அப்துல்லாஹ் கஸ்னவி கூறினார்கள் என்று என்னிடம் கூறிய அதே ஹாஃபிஸ்தானே நீங்கள்? இளைப்பாறிக் கொண்டிருக்கும் அப்துல்லாஹ் சாஹிபின் மண்ணறைக்கு நீங்கள் துக்கத்தைக் கொடுத்திருப்பது வருத்தத்திற்குரியதாகும்.

அவரது விருப்பத்திற்கு எதிராக நீங்கள் செல்ல வில்லையா? மியான் முஹம்மது யஃகூப் சாஹிப் உங்களது உடன்பிறந்த சகோதரர் இல்லையா? அவருடனும் கொஞ்சம் கலந்து ஆலோசிப்பது தானே அறிவுடைமையாக இருந்திருக்கும். மவ்லவி அப்துல்லாஹ் கஸ்னவி சாஹிப், 'காதியானில் ஓர் ஒளி தோன்றியுள்ளது. அவ்வொளி குலாம் அஹ்மது ஆவார்' என தன்னிடம் அறிவித்ததை நினைத்துப் பார்த்து யஃகூப் சாஹிப் சுமார் பத்தாண்டு காலமாக வியப்பில் ஆழ்ந்திருந்தார். அவர் இவ்வாறு அறிவித்ததற்கு இப்போது வரை நான் சான்று பகர்கின்றேன் எனவும் என்னிடம் தெரிவித்திருந்தார். இது விஷயமாக யஃகூப் சாஹிப் எழுதிய கடிதங்கள் இன்னமும் என்னிடம் இருக்கின்றன. நீங்கள் உங்களை ஹாஃபிஸ் எனக் கூறிக் கொள்கின்றீர்கள். ஆனால், உண்மையான ஹாஃபிஸ் (பாதுகாவலன்) ஆகிய இறைவன் மீது நீங்கள் நம்பிக்கை வைக்கவில்லை. மக்கள் மீதுள்ள அச்சத்தின் காரணமாக, நீங்கள் பொய் கூறுகின்றீர்கள். சில வேளைகளில், நான் அப்துல்லாஹ் சாஹிப் அவர்களுக்கு வழங்கப் பெற்ற ஆன்மீகக் காட்சிகளையும், முன்னறிவிப்பு களையும் நினைத்துப் பார்க்கின்றேன். அவையெல்லாம் நீண்ட நாட்களுக்கு முன்பே அவருடனேயே புதைக்கப்பட்டு விட்டன. உங்களைப் போன்ற அவரது பெரிய சீடராக இருக்கக் கூடியவர்களே அதற்கு எந்த மதிப்பும் அளிக்கவில்லை.

وَالسَّلَامُ عَلٰى مَنِ اتَّبَعَ الْهُدٰى [25]

**மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி**

4 அக்டோபர் 1902

---

25. நேர்வழியைப் பின்பற்றுவோர் மீது அமைதி நிலவட்டுமாக!

## அனைத்து முஸ்லிம்களுக்கும், உண்மைக்காகப் பசித்திருப்பவர்கள், தாகித்திருப்பவர்கள் அனைவருக்கும் ஒரு பெரும் மகிழ்ச்சியான நற்செய்தி

இயற்கைக்கு அப்பாற்பட்ட இயேசுவின் வாழ்வு, திருக்குர்ஆனின் வசனங்களுக்கு மாற்றமாக பூத உடலுடன் அவரது விண்ணேற்றம், மரணிக்காதவராக இருந்து கொண்டு, சொர்க்கத்தில் நுழைந்திட்ட காலஞ்சென்ற தூதர்களுடன் இணைந்து அவரது ஆவியும் நுழைந்து விடுவது என்ற கருத்து ஆகியவை கட்டுக்கதைகளாகவும், உண்மை மார்க்கத்திற்கு ஒரு கறையாகவும் இருந்து வருகின்றன. இவ்வாறான கருத்துக்களில் விடாப்பிடியாக நீடித்தலின் காரணமாக, ஓரிறைக் கொள்கை கொண்ட முஸ்லிம்கள் சிலை வணங்கும் மேற்கத்தியர்களுக்கு நீண்ட காலமாக மறைமுகமாகக் கடன்பட்டு வந்திருப்பதையே குறிக்கிறது. இத்தகைய கொள்கைகளை அறிவற்ற முஸ்லிம்கள் ஏற்றுக் கொண்டதன் விளைவாக, வட்டியுடன் சேர்ந்து அதிகரித்த இவர்களது கடன் சுமைகளை அறியாமையில் திழைத்திருக்கும் முஸ்லிம்கள் ஏற்றுள்ளனர். இந்தியாவில் ஆயிரக்கணக்கானோர் இஸ்லாத்தை விட்டும் தங்களது முகத்தைத் திருப்பிக் கொண்டு, கிறித்தவர்களின் கைகளைப் பற்றிப் பிடித்துள்ளனர். இவர்களுக்கு தங்களது கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு வெளிப்படையாக எந்த வழியும் இல்லை. எங்களின் இறைவனான இயேசு கிறிஸ்து தனது உடலோடு விண்ணிற்கு ஏறிச் சென்றதன் மூலம் தனது தெய்வீக ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளார்;

ஆனால், உங்களின் நபி மதீனா வரை கூட பறந்து செல்ல முடியவில்லை; மதீனாவை அடையும் முன் மிகுந்த சிரமத்துடன் மூன்று நாட்கள் தவ்ர் குகையில் மறைந்திருக்க நேரிட்டது என்று கிறித்தவர்கள் முஸ்லிம்களை எள்ளி நகையாடுகின்றனர். மேலும், அதன் பிறகு இறப்பிற்கு முன்னர், ஆயுள் காலம் அவருக்கு நன்றியுணர்வு காட்ட -வில்லை. பத்தாண்டுக்குப் பிறகு அவர் மரணித்து விட்டார். இப்போது, அன்னாரின் பூதவுடல் பூமியில் புதைபட்டுக் கிடக்கின்றது. ஆனால், இயேசு கிறிஸ்துவோ வானில் உயிரோடு இருக்கிறார். மேலும் எப்போதும் உயிருடன் இருப்பார். அவரே மீண்டும் வானிலிருந்து பூமிக்குத் திரும்பி வந்து, இவ்வுலகில் நீதியை நிலைநாட்டுவார். அவரை இறைவனாக ஏற்றுக் கொள்ளாத மக்கள் பிடிக்கப்பட்டு நரக நெருப்பில் போடப்படுவர் என்றும் கிறித்தவர்கள் கூறுகின்றனர்.

முஸ்லிம்களால் இத்தகைய ஏளனங்களுக்கு பதிலுரைக்க முடியவில்லை. அவர்கள் தொடர்ந்து வெட்கத்திற்கும், அவமானத்திற்கும் உள்ளானார்கள். ஆனால் இன்று, இயேசு கிறிஸ்துவின் கடவுட்தன்மையின் பொய் அம்பலப்படுத்தப்பட்டு, அவரது விண்ணேற்ற கற்பனைகள் தகர்க்கப்பட்டுள்ளன. முதலாவதாக, ரோமர்கள், கிரேக்கர்கள், ஸொராஸ்டியர்கள், கிறித்தவர்கள் ஆகியோர் எழுதி, பின்னர் முஸ்லிம்களால் மொழிபெயர்க்கப்பட்ட இயேசுவின் களிம்பு குறித்த விவரக் குறிப்புகள் அடங்கிய எண்ணற்ற பழங்கால மருத்துவப் புத்தகங்களின் கண்டுபிடிப்பு காணக் கிடைக்கின்றது. இந்தக் களிம்பு,

இயேசுவின் சிலுவைப் புண்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

அடுத்ததாக, காஷ்மீரில் உள்ள இயேசுவின் கல்லறையின் கண்டுபிடிப்பு இருக்கிறது. இது தவிர, இயேசுவின் மரணம் பற்றியும், காஷ்மீரில் அவர் அடக்கப்பட்டது குறித்தும் சான்றுகளைக் கொண்ட ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னுள்ள பாரசீக, அரேபிய படைப்புகள் இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளன. ஆயினும், இது தொடர்பாக மிக அண்மையில் எனக்கு கிடைக்கப் பெற்ற செய்தியானது, அனைத்து முஸ்லிம்களுக்கும் ஆரவார மகிழ்ச்சி பொங்கும் ஒரு பெருநாளை தன்னுடன் கொண்டு வந்துள்ளது.

அது, இயேசுவின் சீடர் பேதுருவின் கையெழுத்துடன் ஜெருசலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பழைய ஹீப்ரு மொழி ஆவணம் ஆகும். இதை நான் ஏற்கனவே நூஹின் கப்பல் என்ற எனது புத்தகத்தில் எடுத்து எழுதியுள்ளேன். இந்த ஆவணம், இயேசு சிலுவையில் அறைந்த நிகழ்வுக்கு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த உலகிலேயே அவர் மரணித்தார் என்பதற்கான சான்றுகளைக் கொண்டுள்ளன.

இந்த ஆவணத்தை 2,50,000 ரூபாய் விலை கொடுத்து  ஒரு கிறித்தவ கம்பெனி வாங்கிக் கொண்டது. ஏனெனில், இது பேதுரு என்வரால்தான் எழுதப்பட்டது என உறுதி செய்யப்பட்டு விட்டது. வலுவான சாட்சிகளைக் கொண்டிருக்கின்ற இத்தகைய தெளிவான சான்றுகளுக்கு மத்தியில், இயேசு இன்னமும் உயிரோடு இருக்கிறார் என்ற

கொள்கையிலிருந்து விலகாமல் இருப்பது ஒரு பைத்தியக்காரத் தன்மையாகும்; மேலும் உணரப்பட்ட, ஆய்வினால் கண்டெடுக்கப்பட்டதை மறுக்க முடியாது. எனவே, முஸ்லிம்களே! நான் உங்களுக்கு வாழ்த்துக் கூறிக் கொள்கிறேன். இன்று உங்களுக்குப் பெருநாளாகும். நீங்கள் முந்தைய உங்களின் பொய்யான கொள்கைகளை விட்டு விட்டு இப்போது திருக்குர்ஆனுக்கு ஏற்ப உங்களின் கொள்கையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

இந்த இறுதிச் சான்று இயேசுவின் நெருக்கமான சீடருடையதாகும் என்பதை நான் மீண்டும் கூறிக் கொள்கிறேன். கிடைக்கப் பெற்ற இந்த ஆவணத்தில், அவர் தன்னை மர்யமின் மகனுடைய ஒரு சேவகனாகிய பேதுரு என்று அடையாளப்படுத்திக் கொள்கிறார். அவர் தனது வயதை 90 எனக் கூறுகிறார். இயேசு இறந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர் இதை எழுதியுள்ளார். வரலாற்றின் அடிப்படையில், இயேசு மற்றும் பேதுரு ஆகிய இருவரும் ஒத்த வயதுடையவர்கள் ஆவர். இயேசுவை சிலுவையில் அறையும்போது அவரது வயது 33 ஆகும். அப்போது பேதுருவின் வயது முப்பதுக்கும் நாற்பதுக்கும் இடையில் இருந்திருக்கும். இவ்விரண்டு உண்மைகளும் பிரசித்தி பெற்ற கிறிஸ்தவ அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் -பட்டுள்ளன. (பார்க்க: Smith’s Dictionary, Vol.3, p.2446, [26]موئی ٹیولس New Testament History, இதே பொருளுடைய பிற வரலாற்றுப் படைப்புகள்) பல குறிப்பிடத்தக்க

26. முதல் உருது வெளியீடு தொலைந்து விட்டதால், இப்புத்தகத்தின் பெயரை சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

கிறிஸ்தவ மதத்தின் பெரும் அறிஞர்கள் இந்த ஆவணத்தை பல ஆய்வுகளைச் செய்து இது உண்மை என்று தீர்ப்பு அளித்துள்ளனர். இக்கண்டுபிடிப்புகள் தன்னகத்தே மாபெரும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்துள்ளது. நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, இந்த ஆவணம் பெரும் மதிப்புடையதாக இருக்கிறது. இந்த ஆவணம் கண்டெடுக்கப்பட்ட நூலகத்தின் பரிசுத்த மனிதரின் வாரிசுதாரர்களுக்கு இதற்கான அதிகமான தொகை கொடுக்கப்பட்டுள்ளது.

இயேசுவையும், மேரியையும் இறைத்தன்மை கொண்டவர்களாக நம்பிக்கை கொள்ளும் ரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர் ஒருவரது நூலகத்திலிருந்து இந்த ஆவணம் வெளிவந்துள்ளது என்ற உண்மை, இந்த ஆவணத்தின் நம்பகத்தன்மைக்கான கூடுதல் உறுதியான சான்றாக நமது பார்வையில் இருக்கிறது. அவர் இந்த ஆவணங்களை ஒரு பழங்கால அருளுக்குரிய பொருளாக மட்டும் கருதி பாதுகாத்து வைத்திருந்தார். ஏனென்றால், இது பழைய ஹீப்ரு மொழியில் இருந்தது. எழுதப்பட்ட விதமும் பழமையானதாக இருந்தது. அதன் அசல் மூலம் குறித்து அவர் அறியாதவராக இருந்தார். இதுவும் கூட இந்த ஆவணத்தின் நம்பகத் தன்மைக்கான சான்றாகும். பேதுருவின் கடிதத்திலிருந்து வெளியாகி இருக்கும் இந்த சாட்சி மட்டுமின்றி, மரணத்திற்கு ஒப்பான நினைவிழந்த நிலையில், இயேசு சிலுவையில் இருந்து இறக்கப்பட்டு, கல்லறைக்கு கொண்டு வரப்பட்டார். அங்கு மூன்று நாட்கள் குணம் பெறுவதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டது என சில

குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்த கிறித்தவர்கள் நம்பினர் என்பதை நாம் ஏற்கனவே அறிவோம். இதன் பிறகு, அவர் வேறொரு நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்று, அங்கு பல ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார். இத்தகைய நம்பிக்கை குறித்த விளக்கங்கள் சில குறிப்பிட்ட ஐரோப்பிய புத்தகங்களில் காணலாம். Strauss அவர்கள் எழுதிய New Life of Jesus (இயேசுவின் புதிய வாழ்க்கை), Modern doubt and Christian belief (நவீனகால சந்தேகங்களும் கிறிஸ்தவர்களின் நம்பிக்கையும்), Supernatural Religion (இயற்கைக்கு அப்பாற்பட்ட மதம்) ஆகியவை அவற்றுள் சில. இந்தப் படைப்புகளின் சில பகுதிகளை நான் எனது “துஹ்ஃபா கோல்டவிய்யா” என்ற நூலில் மேற்கோள் காட்டியுள்ளேன்.

**மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி**

அக்டோபர் 6, 1902